**கவனிக்க.-** 2015.07.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1926 - 2015 ජූලි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.07.30

*1926 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1174 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1184 |


**கவனிக்க.-** திருகோணமலை, பன்குளம், மொரவெவ தெற்கு, சிறிகஜபா கல்லென் ரஜமஹாவிகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2015, ஒகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆவணி மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 08.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கெக்கிராவை | கெக்கிராவை மற்றும் திப்பட்டுவெவ பிரதேசத்தின் கலகம் பலாத பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கல்நெவ | நேகம்பஹா பிரதேசத்தின் கலகம் பலாத பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

7-1366

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஓகத்து மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஆடி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | வத்தளை | வத்தளை-மாபோல பிரதேசத்தின் அலுத்குரு கோறளை தெற்குப் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

7-1367

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஓகத்து மாதம் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஆடி 09.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | தொம்பெ | தொம்பெ பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு, சியனே கோறளை கிழக்கு (பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

7-1368

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆவணி மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | வெலிமடை | சில்மியபுர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

7-1496

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆவணி மாதம் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூலை 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பன்வில | பன்வில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பன்வில பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பாததும்பர | உடபகம்பஹா கிழக்கு மற்றும் மேற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாததும்பர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

7-1497

---

## துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு

வணிக கப்பற்துறை செயலகம்

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் வணிக கப்பற்துறை செயலகத்தில் இங்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெற்றிடமாகவுள்ள பதவி** :-

| பதவியின் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| உதவிக் கப்பல் பிரயாண உத்தியோகத்தர் | தரம் III | 03 |

2. **தகைமைகளும் அனுபவமும்** :-

| கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல் அல்லது சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல். | கப்பற்துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக/விசேட தகைமையொன்றாகக் கருதப்படும். |

(அ) **உடற்தகுதி**.- விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு ஆட்படுதலும் வேண்டும்.

(ஆ) **பிற தகைமைகள்** :-

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. **வயதெல்லை**.- 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூ. 15,215 - 10 x 215 - 4 x 240 - 7 x 320 - 15 x 360 - ரூபா 25,965 (MN4-2006A)

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டு, பின்வரும்

புள்ளித் திட்டத்திற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமை அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் :-

| | பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2. | அனுபவம் | 25 |
| 3. | சர்வதேச சட்டம், கப்பல் சட்டம், கப்பல் பணிகள் சம்பந்தமாக சர்வதேச சமவாயம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் | 20 |
| 4. | ஆங்கிலம் அல்லது தமிழ்/சிங்களம் மொழி சார்பில் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் | 10 |
| 5. | கணினித் தேர்ச்சி | 20 |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 |
| | மொத்தப் புள்ளிகள் | 100 |

**7. சேவை நிபந்தனைகள் :**

(i) ***வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :***

| வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சை எது என்பது பற்றி | வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சை | வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை |
|---|---|---|
| 1 ஆவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சை | தரம் III இற்கு ஆட் சேர்ப்புச் செய்யப் பட்டு மூன்று (3) வருடங்கள் கடப்ப தற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை |
| 2 ஆவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சை | தரம் II இற்கு பதவி உயர்வு பெற்று மூன்று (3) வருடங் கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை |
| 3 ஆவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சை | தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து (5) வருடங் கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை |

(ii) ***அரச கரும மொழித் தேர்ச்சி :***

| | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 1. அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மற்றைய மொழிமூலம் ஒன்றில் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத் தர்கள் உரிய அரச கரும மொழி யொன்றில் தேர்ச்சியினை தகுதி காண் காலப்பகுதியுள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 2. மற்றைய அரச கரும மொழி | 07/2007 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான பொது நிர்வாக சுற்ற றிக்கைகளின் பிரகாரம் இயைபுள்ள மட்டத்திற்கான மொழித் தேர்ச்சி யினைப் பெற்றிருத்தல் வேண்டும். |

(iii) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையது மாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகூர் நிலைக்கு உட்படுத்தப்படும்.

(v) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களின் நியமனம் சம்பந்தமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள நடைமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும்.

(vi) சகல ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் எதிர்காலத்தில் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படும்.

**7. விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 2015.08.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர் களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி.

வணிகக் கப்பற்துறை செயலகம்,
இல. 43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு)

**துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு**

வணிகக் கப்பற்துறை செயலகத்தில் உதவிக் கப்பல் பிரயாண உத்தியோகத்தர் (இணைந்த சேவை வகுதி - தரம் III) பதவி

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   (i) முதலெழுத்துக்கள் கடைசியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.

   (ii) சொந்த முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கான வயது :

   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. திருமணமானவரா/திருமணமாகாதவரா/விதவையா என்பது பற்றி : ----.

8. கல்வித் தகைமைகளும் மேலதிக கல்வித் தகைமைகளும் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. தொழில் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப் பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக் காலம் |
|---|---|---|---|
| | | | |

11. ஆங்கிலம் அல்லது தமிழ்/சிங்கள மொழி தொடர்பில் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் :

| தகைமை | தகைமை பெற்ற வருடம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| | | | |

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி :

   (அ) பட்டம் :----.
   (ஆ) டிப்ளோமா :----.
   (இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

   என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் இதற்குரியதான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

   இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
   (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

   இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ......................................, தற்போது .................................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும், அவருடைய வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லையெனவும் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்குக் கருதவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

7-1519

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் (வரையறுத்த) - 2015**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவி கம்பனிகள் பதிவாளர் பதவிக்கான ஒரு வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிய விண்ணப்ப தாரிகளில் திறமையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பொருத்தமான விண்ணப்பதாரி சேர்த்துக் கொள்ளப்படுவார்.

2. **தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :**

(i) சட்டத்தரணியாக இருத்தல் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனி பரிசோதகராக விருத்தல் ;

மற்றும்

(ii) சட்டத்தரணி எனின் கம்பனிகள் பதிவாளர் திணைக் களத்தில் 5 வருட திருப்திகரமான சேவைக்காலத் தினைக் கொண்டிருத்தல் அல்லது பட்டம் பெற்ற கம்பனிகள் பரிசோதகர் எனின் 10 வருடத்திற்குக் குறையாத சேவைக்காலத்தினைக் கொண்ட அலுவல ராக அனுபவம் இருத்தல்.

2.2 **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் மற்றும் இலங்கைக்கு வெளியில் எந்த ஒரு நாட்டிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 **ஏனையவை :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குரிய அனைத்த தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **நியமனத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஒய்வூதியம் கொண்டது. விதவைகள் அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி ஒரு வருட பதிற்கடமை புரியும் கால எல்லைக் குட்பட்டது. நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்திற்கு உதவி கம்பனிப் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப் பட்டு மூன்று வருடத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைக்கு இணங்க சேவைக்கு இணைந்து 5 வருட காலத்தினுள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருப்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் கால எல்லைக்குள் அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொதுச் சட்ட விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கு அமைய இந்நியமனம் மேற்கொள்ளப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பளம், பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ். எல். - 1 - 2006 இன்படி ரூபா 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூபா 53,555 ஆகும்.

5. **அமைப்பு நேர்முகப் பரீட்சை :**

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்படும் நேர்முகத் தேர்வுக்குழு ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்படும்.

(ii) பின்வரும் முறையில் அமைப்பு நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் :

| புள்ளிகள் வழங்கப்படும் பரப்பு | ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 10 |
| 3. ஆங்கிலத் திறமை | 25 |
| 4. மேலதிக அனுபவம் | 30 |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவம் மாதிரிப்படிவத்தின்படி, ஏ4 தாளில் தயாரித்து அனுப்பப்படல் வேண்டும். ஏ4 தாளின் இரண்டு

பக்கத்தையும் பாவிப்பதுடன், இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாவது பக்கத்திலும் மிகுதி இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பதாரியின் கையெழுத்தில் விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திராத மற்றும் பூரணப்படுத்தப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது உகந்தது ;

(ii) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், ''செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, காலி வீதி, கொழும்பு 3'' இற்கு 2015.08.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கம்பனி பதிவாளர் திணைக்கள நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிக் கம்பனிப் பதிவாளர் பதவிக்கு தெரிவுசெய்தல் (வரையறுக்கப்பட்ட)'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பூரணப்படுத்தப் படாத சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். தபாலின்போது விண்ணப்பமொன்று காணாமல் போனதாக அல்லது தாமதமாகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iv) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள, குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப் பித்துள்ளக சகல விண்ணப்பதாரிகளும் கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் இவ்வாறு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்களாக கொள்ளப்பட மாட்டாது.

7. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரி அமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பொழுது பரீட்சார்த்தக் குழுவினால் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- தங்களால் அனுப்பப் பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை அல்லது தவறானது என உறுதிப்படுத்தப் படின் தங்களுக்கான பரீட்சார்த்த தகைமை நிராகரிக்கப்படும். சேவையில் சேர்த்துக்கொண்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் உங்களை சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவானதாகும். அதேபோல் வெற்றிடம் பூரணப்படுத்தப்படல் அல்லது பூரணப்படுத்தப்படாமை அல்லது வெற்றிடங்களில் பகுதியளவு பூரணப்படுத்தப்படல் போன்ற இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவரும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படியே நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

----
செயலாளர்.

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு,
காலி வீதி,
கொழும்பு 03,
2015, யூலை 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் (வரையறுத்த) - 2015**

1. 1.1 முதலெழுத்தினை இறுதியில் இட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.2 2015.08.14 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்)

4.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

5. 5.1 பிரசாவுரிமை :----.
(பரம்பரையினாலா அல்லது பதிவினாலா என்பது)

5.2 தேசிய இனம் :----.

5.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. தாங்கள் 2015.08.14 ஆந் திகதி ..................................... சேவைக்கு/தரத்திற்கு உள்வாங்கப்படுவதற்காக பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தினைக் குறிப்பிடவும் :----.

7\. 7.1 வர்த்தமானி அறிவிப்பிலுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளீரா ? : ----.

7.2 தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் :
வர்த்தமானி அறிவித்தலில் 2.1 (i) இன்படி பெற்றுக்கொண்ட தகைமைகள் சட்டத்தரணியாகவா/கம்பனிப் பரிசோதக ராகவா ? :----.

7.3 தொழில் தகைமைகள் :
சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
பதிவு இல. :----.

7.4 தொழில் அனுபவம் :
2015.08.14 ஆந் திகதியில் தொழில் அனுபவம் :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

7.5 விண்ணப்பிப்பதற்குப் பெற்றுக்கொண்ட தகைமைகளுக்கான சேவை/தரத்தினைக் குறிப்பிடுக :

தற்போதைய பதவி :----.
தரம் :----.
வகுப்பு/பிரிவு :----.
நியமனம் பெற்ற திகதி :----.
அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.

விண்ணப்பிப்பதற்கு சேவைக்காலம் பல இருப்பின் அத்திருப்திகரமான சேவைக்காலம் தொடர்பான விபரங் களைக் கீழ்வரும் கூட்டினுள் குறிப்பிடவும் :

| சேவை/பிரிவின் பெயர் | நியமனம் பெற்ற திகதி |
|---|---|
| | |

7.6 வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆவது பந்தியில் குறிப்பிட் டுள்ளவாறு பதவியின் சேவையில்/பிரிவில் தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய 2015.08.14 ஆந் திகதிக்கு திருப்திகரமான சேவைக்காலம் :----.

7.7. கல்வித் தகைமைகள் (அவசியமாயின் மட்டும்) :

| பட்டத்தின் பெயரும் வருடமும் | பல்கலைக் கழகம்/ நிறுவனம் | பதிவு இலக்கம் | உள்வாரி/ வெளிவாரி | பாடங்கள் | சித்தி எய்திய வகுப்பு | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

8\. 8.1 ஏதேனும் தவறொன்றிற்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீர்களா ? :----.

ஆம் எனில், விபரங்களைத் தருக :-----.

9\. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

2015.08.14 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த ஐந்து வருடம்/பத்து வருடத்திற்குள் (சேவையில்/ திணைக்கள பரீட்சையின் நிபந்தனைகளின் வேதன ஏற்றங்கள் தவிர) வேதன ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 (ii) பந்தியின்படி 2015.08.14 ஆந் திகதிக்கு கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் (ஐந்து/பத்து) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினைக் கொண்டுள்ளதுடன் (எச்சரிக்கை தவிர) எவ்வகையிலும் தண்டனைக்கோ குற்றத்திற்கோ ஆளாகவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல சட்டதிட்டங்களுக்கும் அமைவாக இவ்வமைப்பு நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு நான் தகுதியானவர் என்றும் இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவிக்கிறேன். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான நடைமுறை உள்ளடக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய நான் தகுதியற்றவன் என அறியவரும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சைக்கு முன்னர், அதன்போது அல்லது அதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் சேர்த்துக்கொள்ளத் தகைமையற்றவனாவேன் என்பதை அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10\. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு** (விண்ணப்பதாரியின் தனிநபர் கோவையின்படி) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................... என்பவர், கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் ................................... எனும் பதவியில் சேவையாற்றுவதுடன், 2015.08.14 ஆந் திகதிக்கு முன்னர் ஐந்து/பத்து வருட காலத்திற்குள் (சேவையில்/திணைக்களப் பரீட்சையின் நிபந்தனைகளின் வேதன ஏற்றங்கள் தவிர) அவர் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் எனவும், அச்சேவைக்காலத்தினுள் (எச்சரிக்கை தவிர) எவ்வகையிலும் தண்டனைக்கோ குற்றத்திற்கோ ஆளாகவில்லை எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 (ii) பந்தியின்படி 2015.08.14 ஆந் திகதிக்கு கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் (ஐந்து/பத்து) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினைக் கொண்டுள்ளதுடன் வர்த்தமானி அறிவித்தலில் உள்ள நிபந்தனைகளின்படி அவர் இந்நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளைக் கொண்டுள்ளதுடன் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

7-1264

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிவிவகார அமைச்சு

இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2014 (2015)

COMPETITIVE EXAMINATION FOR FILLING VACANCIES IN THE PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE CADRE IN SRI LANKA MISSIONS/ POSTS ABROAD - 2014 (2015)

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் மட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி பெறும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிவிவகார அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் 2015, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு இவ்விண்ணப்பதாரர்கள் தோற்ற வேண்டும்.

2. **தகைமை.**- விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பத் திகதியன்று விண்ணப்பதாரர் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவராக அல்லது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இல் 5 வருட கால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பனவே பரீட்சை சம்பந்தமான சகல விடயங்களிலும் பிரயோகிக்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது ;

**குறிப்பு.**- மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளல்லாத பிற முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியற்றவராவர் ;

(இ) விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 56 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பத் திகதியன்று மேலே (அ) இன்கீழே குறிப்பிடப்பட்ட சேவைகளின் வகுப்பு II இன் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

(உ) விண்ணப்பம் செய்யும் காலப்பகுதிக்கு முன்னைய ஐந்து வருட காலத்தில் அவ் அவ்வருடத்திற்குரிய சம்பள ஏற்றங்களை உரிய திகதியில் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஊ) எச்சரிக்கை தவிர, பிற ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதுவும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :- I. தற்பொழுது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சேவையாற்றுவோர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.

II. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் போது தகைமை உள்ளாரெனினும் அதன் பின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/ மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு/தரம் I இற்கு மேலான ஒரு சேவைக்கு பதவியேற்றம் செய்யப்பட்டாலோ அல்லது வேறொரு சேவைக்கு மாற்றப்பட்டாலோ இலங்கை தூதரகங்களுக்கு உள்நாட்டு சேவையால் நிரப்பப்படவுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு நியமனம் பெற தகுதியற்றவராவர். அப்படி ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பின் அது இப்பகுதி (அ) வின் பிரகாரம் தாக்கம் ஏற்படலாமாகையால் இதனை வெளிவிவகார அமைச்சு செயலாளருக்கு அறிவித்தல் கொடுப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

III. தாபன வேலை மற்றும் கணக்குகளில் அனுபவம் உள்ளவர்களுக்கும் ஆங்கிலம் மற்றும் வேறு மொழிகளில் திறனாற்றல் உள்ளவர்களுக்கும் (எழுத்தும் கதைத்தலும்) முன்னுரிமை வழங்கப்படும். வேலை பார்க்கக்கூடியளவு வெளிநாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

IV. கணினி அறிவு ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் என்பதுடன் அத்தகைமை திறன்களின் அளவு பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

3. **தேர்வு முறை.**- எழுத்துமூலப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையானது வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் நடத்தப்பட்டு தேர்வு நடைபெறும். இப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும்.

3.1 **எழுத்து மூலப் பரீட்சை.**- கீழே தரப்பட்டுள்ள எழுத்து மூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும் :-

| வினாத்தாள் இலக்கம் | வினாத்தாள் | கால வரை |
|---|---|---|
| 1 | நிதி முறைகள் | 2 மணித்தியாலம் |
| 2 | தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறை | 2 மணித்தியாலம் |
| 3 | ஆங்கிலம் | 2 மணித்தியாலம் |
| 4 | பொது அறிவு | 1 மணித்தியாலம் |

**குறிப்பு.**- (1) **கணக்கீடு.**- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணக்கு முறைகள், கணக்குத் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(2) **தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும்.**- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(3) ***ஆங்கிலம்*** .- விண்ணப்பதாரியின் ஆங்கில புரிந்துணர்வு மற்றும் எழுத்து மூல தொடர்பாடல் என்பவற்றைப் பரீட்சிப்பதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(4) ***பொது அறிவு***.- இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதாரப் பின்புலம், வரலாறு மற்றும் புவியியல் உட்பட நிகழ்கால சர்வதேச விவகாரங்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையிலான மாதிரி வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியிருக்கும்.

3.2 *நேர்முகப் பரீட்சை:*

3.2.1 நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பதுடன் நேர்முகப் பரீட்சையானது வெளிவிவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும்.

3.2.2 விண்ணப்பதாரர் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் பெற வேண்டியதுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதற்கு மேலாக பெறுபவர்களே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர்.

3.2.3 மேலுள்ள 3.2.2 பந்திக்கு ஏற்ப தகைமைகளைப் பூர்த்திசெய்யும் அனைத்துப் பரீட்சார்த்திகளது நேர்முகப் பரீட்சைக்கான அகர வரிசையில் தயாரிக்கப் பட்ட பெயர்ப்பட்டியல் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் கிடைக்கப் பெற்றதுடன் எழுத்து மூலம் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளை மையப்படுத்திய திறமை அடிப்படையிலான பெறு பேற்றுப் படிவம் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரி களுக்கும் பெறுபேற்றின் ஒரு படிவம் அனுப்பி வைக்கப்படும்.

**4. பதவிக்கமர்த்தும் நிபந்தனைகள்:**

4.1 இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச்சேவைக் காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சார்பாக அதிருப்தி காணுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

4.2 அந்தந்த தூதரகங்களின் தேவைகளைப் பொறுத்து உத்தியோகத்தரின் தகைமை (வெளிநாட்டு மொழி என்பன) மற்றும் திறமை ஆகியவற்றினைப் பொறுத்து நியமனம் வழங்கப்படும். இப்படியான நியமனங்கள் மேற்கொள்ளப் படும்போது உத்தியோகத்தரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் முறைப்பாடுகளையிட்டு (பிள்ளைகளின் கல்வி போன்ற) கவனிக்க அமைச்சிற்கு எதுவித கடப்பாடும் இல்லை என்பதுடன் உத்தியோகத்தர் உலகின் எந்த தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டாலும் அத்தூதரகத்திற்கு கடமையின் பொருட்டு அவர் சமுகமளிக்க வேண்டும்.

4.3 வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் விதிகள், நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்ற வழமையாக கோரப்படுவதுடன் அதற்குரிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும். இக்காலவரை முடிவுற்றதும் உத்தியோகத்தர் இலங்கைக்கு திரும்பி வரவேண்டும்.

4.4 இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு தெரிவாகும் உத்தியோகத்தர்கள் இலங்கையில் சேவையாற்றும்போது அவர்கள் கொழும்பிலேயே பெறும் நிரந்தர சம்பளத்தை தொடர்ந்து பெறுவார்கள். வெளிநாட்டில் சேவை செய்யும் காலத்தில் வெளிநாட்டுக்கான பணிக் கொடுப்பனவு ஒன்றும் பெறுவர்.

4.4 உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதும் தெரிவு செய்யப்பட்டவரினது வெளிநாட்டுச் சேவைக் காலத்தில் அவரினது, அவரினது வாழ்க்கைத் துணையினது மற்றும் அவரில் தங்கியுள்ள 21 வயதிற்குக் குறைவான இரு பிள்ளைகளுக்கு மட்டும் நியமனம் பெறும் நாட்டிற்குச் செல்வதற்கான மற்றும் திரும்பி வருவதற்கான போக்கு வரத்துச் செலவுகள், அங்கு தங்குமிடச் செலவுகள் மற்றும் பிற சலுகைகள் வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டபடி அரசாங்கம் பொறுப்பேற்கும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

5.1 விண்ணப்பப்பத்திரம் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய ஏ-4 அளவிலான கடதாசியில் மூன்று பக்கங்களில் முறையே 1 தொடக்கம 5 வரை முதலாம் பக்கத்திலும் 06 தொடக்கம் 15 வரை இரண்டாம் பக்கத்திலும் மற்றும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப் பட வேண்டும். மாதிரிப்படிவத்தின்படி தயாரிக்கப்படாத மற்றும் தேவைப்படும் தகவல்கள் சரியாகக் கொடுக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப் படும். விண்ணப்பங்களின் நிழற்படப்பிரதிகளை வைத்தி ருத்தல் உசிதமானது என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப் படுகின்றனர்.

5.2 சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் விண்ணப்பதாரர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

5.3 விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். அதில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்குத் தகுதியுள்ளவரா என்பதுடன் விண்ணப்பத்தில் கூறியிருப்பவை உண்மையானவை என்பதையும் அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவரை தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும் என்பதாகவும் உறுதிப்படுத்த வேண்டும்.

5.4 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, பெலவத்த, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு 2015, செத்தெம்பர் மாதம் முதலாம் திகதியன்றோ (2015.09.01) அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல்

மூலையில் 'இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் தேர்வுக்கான பரீட்சை' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆகும். இக்கட்டணம் நாட்டின் எந்தவொரு தபால்/உப தபால் நிலையத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 என்ற கணக்கிற்கு செலுத்தப்பட்டு பெறும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தொகை மற்றும் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம் என்பன விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் வேறு விதிகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டோ அல்லது தபால்/காசோலைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

7. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகி விட்டதென்பதான குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்** :-

8.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

8.2 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பிவைப்பார். பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைத்ததற்கான அறிவித்தலொன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரகாரம் விண்ணப்பதாரிகள் எவருக்காவது பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அது பற்றி பரீட்சைத் திணைக் களத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். நீங்கள் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின், பரீட்சைக் கட்டணம் செலுத்திய தற்கான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதிகளையும் விண்ணப் பப் படிவத்தைப் பதிவுத்தபாலில் அனுப்பியமைக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் சேர்த்து உங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சென்று விசாரிப்பது பொருத்தமானதாகும். நீங்கள் கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் விண்ணப்பதாரியாயின் தொலைநகல் மூலம் உமக்குரிய அனுமதி அட்டையை அனுப்பிவைக்குமுகமாக உமது மேற்குறிப்பிட்ட தகவல் களுடன் உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட ஒரு வேண்டுகோள் கடிதத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி விடயங்களை அறிந்துகொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

8.3 பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்தியொருவர் கையொப்ப மிட்டு உறுதிசெய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்.

8.4 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எழுத வேண்டும். பரீட்சார்த்தி தான் பரீட்சை எழுதும் முதல் நாளன்று தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவர். இவைகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை களுக்கு ஆளாக இடமுண்டு.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளி யிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அவர்களின் தீர்மானமே இறுதியானதாகும்.

8.5 பரீட்சைக்கான அனுமதிச்சீட்டை விண்ணப்பதாரருக்கு வழங்குவதன் மூலம் பரீட்சார்த்தி பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பெற்றுள்ளார் என்னும் கருத்து கொள்ளப்படலாகாது.

9. **பரீட்சை மொழி** :

9.1 பரீட்சை சிங்களம்/தமிழ் /ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சை எழுதும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.2 பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் ஆங்கில வினாத்தாளைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பாடங்களையும் சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவது ஒரு மொழியிலேயே எழுத வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குகின்றமைக்கான தண்டனை** :

10.1 பரீட்சார்த்தி ஒருவர் தனது அறிவின்படி சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் தவறானது என்று கண்டுபிடிக்கப்படுமிடத்து அல்லது வேண்டுமென்றே ஏதாவது தேவைப்படும் தகவலை மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதுடன் இதன் காரணமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகுதியற்றவராவார்.

10.2 பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அனுமதி அட்டை வழங்குதல் என்பது ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர் என்பதாக அமையாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாள அத்தாட்சி**:

11.1 ஒரு பரீட்சார்த்தி தனது பரீட்சை நிலைய மேற்பார்வை யாளரிடம் தனது அடையாளத்தை அவர் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். அதற்கமைய கீழே தரப்படும் ஏதாவதொரு அடையாளச் சான்று போதுமானதாகும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

12. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதியானதாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலின் வாசகத்தில் ஏதேனும் மாறுபாடு இருக்குமிடத்து, அச்சந்தர்ப்பத்தில் சிங்கள வாசகமே சரியானதாகக் கொள்ளப்படும்.

சித்ராங்கனீ வாகீஸ்வர,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
'குடியரசுக் கட்டிடம்',
த. பெ. இல. 583,
கொழும்பு 01.
2015, யுலை 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014 (2015)**

**Application for the Competitive Examination for filling Vacancies in the Public Management Assistants' Service Cadre in Sri Lanka Missions/Posts Abroad - 2014 (2015)**

பகுதி அ

(அலுவலக உபயோகத்திற்கு)

தங்களுக்கு உரித்தான சேவை :
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 1
மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 2
உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 3
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)

பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)

1.0 பெயர் :-

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) (ஆங்கில பெரிய எழுத்தில்) உதாரணம் : SILVA M. A.) : -----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.0 முகவரி :

2.1 அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படுவதற்கான முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

தொலைபேசி இல. :-----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

தொலைபேசி இல. :-----.

3. 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

3.2 பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 சேவை : அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/ உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (அவசியமற்ற வற்றை கீறி விடவும்) :-----.

4.2 அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/உள்ளூராட்சி அரச சேவை முதல் நியமனத் திகதி மற்றும் சேவையில் சேர்ந்த மொழி :----.
(அவசியமற்றவற்றை கீறி விடவும்.)

5. 5.1 சிவில் அந்தஸ்து :

திருமணமானவர் -2 /திருமணமாகாதவர் - 1

(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் இடவும்.)

5.2 திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை, பிறந்த திகதி, அவர்களின் வயது :-----.

6. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் விபரம் தரவும் :----.

7. கல்வித் தகைமைகள் (மொழி மூல விபரத்துடன்) :-----.

8. பதவி உயர்வு பெற்ற திகதி :-

8.1 வகுப்பு II :-----.

வகுப்பு II இல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பூர்த்தி செய்த திகதி :-----.

8.2 வகுப்பு I :-----.

8.3 விண்ணப்பதாரர் தற்பொழுது சேவையில் இருக்கும் வகுப்பு மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி :-----.

9. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

10. அனுபவம் : (வருடங்கள் குறிப்பிடுக.) :-----.

10.1 கணக்கீடு :-----.

10.2 தாபன விதிமுறைகள் :-----.

11. மொழித் தேர்ச்சி :-----

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| (அ) சிங்கள மொழி | | | |
| (ஆ) தமிழ் மொழி | | | |
| (இ) ஆங்கில மொழி | | | |
| (ஈ) வேறு பிற நாட்டு மொழி | | | |

12. திறமை :

12.1 தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :-----.

12.2 கணினி அறிவு (விபரம் தரவும்) :-----.

13. விண்ணப்பதாரர் இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் முன்னர் சேவையாற்றியிருந்தால் திகதிகளுடன் தூதரகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக :-----.

14. பிற தகைமைகள் ஏதும் :-----.

15. பரீட்சைக்கான கட்டணம் மாவட்ட பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்டபோது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு கீழே உள்ள கூட்டிற்குள் ஒட்டப்பட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

| |
|---|
| |

1. பற்றுச் சீட்டு இலக்கம் :-----.
2. மாவட்டம்/பிரதேச செயலகம் :-----.
3. திகதி :-----.
4. தொகை :-----.

**குறிப்பு**.- பணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்படல் வேண்டும்.

16. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

2015, செத்தெம்பர் 1 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளேன் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த எதுவித ஒழுக்காற்று தண்டனையையும் பெறவில்லை என்றும், இத்தால் உறுதிமொழிகின்றேன். அத்துடன் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் எனவும் உறுதிமொழிகின்றேன். கொடுக்கப் உபட்டுள்ள தகவல் ஏதாவது பரீட்சைக்கு முன்போ, பரீட்சையின் போதோ அல்லது பின்போ தவறானது எனக் காணப்படுமிடத்து எனது விண்ணபத்தை அல்லது நியமனத்தை இரத்துச் செய்யக்கோரும் அதிகாரம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு உண்டு.

பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைந்து நான் செயற்படுவேன் என்றும், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ நான் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து நான் பரீட்சையின் சட்டப்பிரமாண தீர்ப்புக்கமைந்து நடப்பேன் என்றும் உடன்படுகிறேன். நான் மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை சம்பந்தமான சட்ட திட்டங்களுக்கு அமைந்து ஒழுகுவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கும், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அவரால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என உறுதியளிக்கிறேன்.

-----.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

பகுதி - ஆ

(திணைக்களத் தலைவரால் நிரப்பப்படல் வேண்டும்)

வகுப்பு I/வகுப்பு II/I அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ள திரு./ திருமதி/ செல்வி ............... என்பவர்,

(அ) 2015.09.01 ஆந் திகதிக்கு முன்னரான 5 வருடங்களில் தனது சம்பள உயர்வுகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்பதையும் ;

(ஆ) 2015.09.01 ஆந் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதியில் எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை என்பதையும் விண்ணபத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். பரீட்சைக்குரிய உரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

**சிபார்சு செய்தல்.**

(I) விண்ணப்பதாரர் வெளிநாட்டு தூதரகங்களில் சேவை செய்வதற்குரிய தகைமை.

(II) விண்ணப்பதாரர் தெரிவாகுமிடத்து அவரைத் தற்போதைய சேவையிலிருந்து தவறாது விடுவிக்க முடியுமா ? முடியாதா ? என்பது :

....................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

7-1568